சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. 155/2019

பெயர்:மீனாட்சி பி.வா.சா.2 தேதி **26.11.2025**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) எனக்கு எழுதப்படிக்கத்தெரியாது. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் என்ன பதில் தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கிரையம் வாங்கியதாக கூறக்கூடிய சொத்தை யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் கலியபெருமாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். மேற்படி கலியபெருமாளுக்கு எந்த ஆவணத்தின் வழியாக சொத்து பாத்தியம் என்பதனை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் கலியபெருமாளுக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தானது கலியபெருமாளுக்கு பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கலியபெருமாளுக்கும் வாதி வீரப்பனுக்கும் எக்காலத்தில் வாய்மொழியாக பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த இடத்திலும் கலியபெருமாளுக்கு வாய்மொழியாக பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2) கலியபெருமாள் உடையார் பட்டியில் உள்ள மாரிஸ்ட் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். அவர் தரகம்பட்டியில் தங்கியுள்ளார் என்றால் சரிதான். வழக்குச்சொத்தை வாதி வீரப்பன் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வழக்குச்சொத்தை கிரையம் பெற்ற நாளுக்கு முன்னரோ, பின்னரோ இடத்திற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். எப்போது மேற்படி சொத்திற்கு சென்றேன் என்றால் வழக்குச்சொத்தை வாங்குவதற்கு முன்னரும், பின்னரும் சென்றுள்ளேன். கிரையம் பெறுவதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்னர் வழக்குச்சொத்தை பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் வழக்குச்சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்னர் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து கொண்டு வாதியின் அனுபவத்தையும், சுவாதீனத்தையும், இடையூறு செய்யவேண்டும் என பொய் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. சொத்தை பின்னர் பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை.

3) நான் உண்மையிலேயே பணம் கொடுத்து சொத்தை கிரையம் பெற்றிருந்தால் சொத்தினை சென்று பார்த்திருப்பேன் என்றாலும், பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் சொத்தினை சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை அளவீடு செய்ய சர்வேயர் வந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நிலஅளவையர்

சொத்தை பொறுத்து எக்காலத்திலும், பிரிக்கப்படவில்லை என அறிக்கை கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் ஏற்படுத்தி கொடுத்தாக கூறக்கூடிய கிரையம் ஆனது பெயரளவிலான கிரையம் என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்திற்கு சரியான மறுபயன் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

4) கிரையத்தொகை தெரியுமா என்றால் ஞாபகமில்லை. உண்மையிலேயே நான் பணம் கொடுத்திருந்தால் தேதி ஞாபகம் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. ஒருவேளை நான் பணம் கொடுத்தாக நீதிமன்றம் கருதும்பட்சத்தில் வாதியானவர் மேற்படி தொகையினை நீதிமன்றம் விதிக்கும்வட்டியுடன் செலுத்த தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. ஒருவேளை 1,2 பிரதிவாதிகள் சொத்தை விற்பனை செய்யவேண்டும் என்றால் முதலில் வாதியை அனுகியிருக்கவேண்டும் அவ்வாறு செய்யாமல் நான் கிரையம் பெற்றது தவறு என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2025.11.26 15:06:41 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.